1983 பிப்ரவரி 14]

திரு. சு. பாலன் : நான் என்னுடைய தொகுதியில் சொன்ன அந்த இடத்தைப் பொறுத்தவரையில் மாநில சர்க்கார் எந்த உதவியும் செய்யவில்லை. மத்திய சர்க்கார் உதவியுடன் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கப்படுமா என்று நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிதாக வருகின்ற தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்க வேண்டியுள்ளது. ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் அந்த வீட்டை விட மறுக்கின்றார்கள் என்று அமைச்சர் ஏற்கனவே சொன்னார்.

திரு. சு. பாலன் : இதில் மாநில சர்க்கார் ஒரு தொகையும் செலவழிக்கவில்லை. மத்திய சர்க்கார்தான் செலவழித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பிரச்சினை அல்ல, இது. வீடு கட்டுவதிலே பிரச்சினை வரவில்லை. யார் கட்டியிருந்தாலும் காலி செய்வதைப் பற்றிய பிரச்சினை.

திரு. சு. பாலன் : சொந்தமாக்கித் தருவதைப் பற்றிய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சொந்தமாக்கித் தருவதற்குத்தான் பதில் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். சொந்தமாக்குவது கஷ்டம். தொழிற்சாலைகளுக்கு வீடு சொந்தமாக இருந்தால்தான் அந்தத் தொழிலாளர்கள் அதிலேயே வந்து குடியிருக்க முடியும். புதிதாக வருபவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விட்டார்கள். அது நடக்காது போல் இருக்கிறது. ஆகவே, வேறு என்ன செய்வது என்று யோசனை செய்கிறோம் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், விடையை என்னை விட மிக அழகாகச் சொல்லிவிட்டீர்கள். (சிரிப்பு).

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் 1981–ஆம் ஆண்டு பெற்ற மொத்த கடன் தொகை.

* வினா எண் 274—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்காக ஆயுள் காப்பீடுக் கழகத்திடம் இருந்தும் மத்திய ஹட்கோ (HUDCO) நிறுவனத்திடமிருந்தும் மற்றும் தேசிய வங்கிகளிடமிருந்தும் மாநில வீட்டு வசதி சங்கம் 1981-ம் ஆண்டு பெற்ற மொத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 1981-ம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 800 இலட்சங்களும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 96.19 இலட்சங்களும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து ரூ. 600 இலட்சங்களும் கடனாகப் பெற்றுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு நாம் பெற்ற கடனைப் பற்றிச்சொன்னார்கள். இப்பொழுது கடனைப் பெறுவதிலே தாமதம் ஏற்படுவதன் காரணமாக, பல இடங்களிலே உள்ள வீடுகட்டும் சங்கங்கள் தங்களுடைய பணிகளைத் தொடர முடியாமல் இருக்கிறது. இன்று நகரப் பகுதிகளிலே அல்லது கிராமப் பகுதிகளிலே வீடு கட்டுவதன் மூலமாக நலிவுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கமுடிகிறது. வீடில்லாதவர்களுக்கு வீடும் கொடுக்க முடிகிறது. ஆகவே, இதை மானியமாக, அல்லது கடனாகத்தான் கொடுக்கிறோம். கடனும் ஒழுங்காக வசூலாகிக் கொண்டிருக்கிறது. இந்த 1982-ஆம் ஆண்டு இதுவரை, மத்திய காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ அல்லது ஹட்கோவிடமிருந்தோ எந்தவித நிதியும் பெறவில்லை. அந்த நிதியைப் பெறுவதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதோடு, வட்டி வீதம் அதிகமாகயிருக்கிறது. அந்த வட்டி வீதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டத்திற்கு 1982-ஆம்ஆண்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூபாய் பத்து கோடியை 11 சதவீத வட்டி வீதம் சொத்துப் பொறுப்பு உறுதியின் பேரில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்குக் கடனாக அளித்துள்ளது. ஆயுள் காப்பீடுக் கழகத்தின் கடன்களை இருபது வருடங்களில் திருப்பித் தர வேண்டும். வட்டி அதிகம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன், இந்த அரசும் ஒத்துக் கொள்கிறது. நானே பம்பாய் சென்று இதைப்பற்றிப் பேசினேன். ஆனால் அவர்கள் வட்டியை மேலும் உயர்த்துவதாக இருக்கிறார்களே தவிர குறைப்பதாக இல்லை என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்

திரு. சோ. அழகர்சாமி : தலைவர்களே, வட்டியை அவர்கள் குறைக்கவில்லை என்று சொன்னார்கள். 9 சதவீதமாக முன்னால் இருந்தது 11 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. வேறு மாநிலங்களுக்கெல்லாம் வட்டியைக் கொஞ்சம் குறைத்துத் தருவதாக நான் கேள்விப்படுகிறேன். அதோடு, கிராமப் பகுதியிலே வீடு கட்டுவதற்காக 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. 3,000 ரூபாயில் வீடு கட்ட முடியாது. ஏனென்றால் இப்பொழுது எல்லாவிதமான மூலப் பொருட்களின் விலையும் உயர்ந்து விட்டதால் 3,000 ரூபாயில் கட்ட

முடியாது என்பதை அமைச்சரவர்களும் உணர்ந்திருப்பார்கள். எனவே, குறைந்தபட்சம் அதை, 5,000 ரூபாயாகவாவது உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மற்ற மாநிலங்களுக்குக் குறைந்த வட்டியில் கொடுக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை வைத்து, பரிசீலனை செய்து அப்படியிருந்தால் அதற்காகப் போராடத் தயாராக இருக்கிறோம். அடுத்தபடியாக, கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக கொடுக்கப்படும் தொகையை 4,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இப்பொழுது 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று, தொழிற்சங்க பாணியிலே அது கேட்கப்படுகிறது. கோரிக்கை நியாயமற்றது என்று தள்ளிவிட முடியாது. நியாயமான கோரிக்கைதான். இந்த அரசே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எண்ணுவதற்கு முன்னதாகவே அதைப்பற்றி நினைத்துஅதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனாலும், கிராமீய கூட்டுறவுச் சங்கங்களிலும், நகரப் பகுதிகளிலேயும் செயல்படுகின்ற வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகமான மனுக்கள் வந்துள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை தருகின்ற வகையில் இந்த நடப்பாண்டில் அதிக நிதியை ஒதுக்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்புடையதாக இந்தக் கேள்வி இல்லை என்றாலும், அவர்களுடைய எண்ணத்தை வெளியிடுகிறார்கள். முயற்சி எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களிலே இந்த வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து அரிசன மக்கள் வீடு கட்டுவதற்கு ஏராளமானவர்கள் விண்ணப்பித்தார்கள். மனுக்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு பணம் வழங்குகின்ற கால கட்டத்தில் பணம் இல்லை என்று அதிகாரிகள் சொல்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் உடனடியாக போதிய நிதியை ஒதுக்கி அவர்களுக்கெல்லாம் பணம் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா முயற்சிகளும் விரைவிலே முழு மனதோடு, ஆர்வத்தோடு எடுக்கப்படும்.